Ontario

தாக்கப்பட்ட பெண்களின் உதவிக்கரம் 1-866-863-0511-இல் 24 மணி நேர தொலைபேசி மற்றும் TTY 1-866-863-7868 நெருக்கடி நேர சேவையை ஒன்ராறியோவில் உள்ள இழிவிழைக்கப்பட்ட பெண்களுக்கு வழங்குகிறது. இந்த சேவை மறைக்காப்பானது மற்றும் ரகசியமானது மற்றும் 154 மொழிகளில் சேவைகள் வழங்கப்படலாம்.

தாக்கப்பட்ட பெண்கள் உதவிக்கரம் சேவைகள் பற்றிய மேலதிக தகவலுக்கு இந்த இணையதளம் பார்க்கவும் ***www.awhl.org***

அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் பிரச்சாரம் பற்றிய மேலதிக தகவலுக்கு இந்த இணையதளம் பார்க்கவும் ***www.neighboursfriendsandfamilies.on.ca***

உங்கள் உடனடிப் பாதுகாப்பு பற்றி நீங்கள் கவலையுற்றிருந்தால், போலீசை அழைக்கவும்.

நிதி வழங்கியோர் ஒன்ராறியோ அரசு 02/2009 Tamil

# அண்டைவீட்டார், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர்



# இழிவு இழைக்கப்படும் பெண்களுக்கு பாதுகாப்பு திட்டமிட குறிப்புகள்

## பாதுகாப்பு திட்டமிடுதல் முன்னுரிமை கொண்டது. உங்கள் பாதுகாப்பை அதிகரிக்க சில முக்கிய வழிகள் இங்குள்ளன.

1 நீங்கள் நம்பும் ஒருவரிடம் இழிவுப்படுத்தப்படுவதைப் பற்றிச் சொல்லுங்கள்.
2 எல்லா முக்கிய ஆவணங்களையும் சேகரியுங்கள்: அதாவது எல்லா தனிநபர் அடையாளங்கள், பண சம்பந்தமான மற்றும் சட்டபூர்வ காகிதங்கள், வீட்டுப்பத்திரம்/குத்தகை, முகவரி புத்தகம், மருந்துகள் மற்றும் பணம், கிரெடிட் கார்டுகள்.
3 மதிப்புமிக்க படங்கள், நகை மற்றும் உணர்வுபூர்வமாய் மதிப்புள்ள பொருட்கள், அத்துடன் உங்கள் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் மற்றும் அவர்களுக்கு தேவையானவை.
4 இழிவுப்படுத்துபவரின் மற்றும் உங்கள் குழந்தைகளின் புகைப்படம் கைவசம் வைத்திருங்கள்.
5 பெண்களின் காப்பகம் அல்லது போலீசைத் தொடர்பு கொள்ளவும். பெண்கள் இழிவு கேஸ்களில் **(woman abuse cases)** வல்லுநரான ஒரு அதிகாரியை நாடவும். அவன்/அவள் உங்களுக்கு மேற்கொண்டு பாதுகாப்பு திட்டமிடலில் உதவலாம்.
6 வக்கீலைக் கலந்து ஆலோசிக்கவும். உடல் மேல் இழிவிழைக்கப்பட்டதற்கு ஏதேனும் சாட்சிகள் (போட்டோ போன்றவை) **(photos)** வைத்திருக்கவும். வன்முறைச் சம்பவங்களை குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்யுங்கள், தேதிகள், சம்பவங்கள் மற்றும் பயமுறுத்தல்கள் மற்றும் சாட்சிகளைக் குறிக்கவும்.
7 உங்கள் குழந்தைகளின் பள்ளி அல்லது பகல்நேர காப்பு மையம் நிலைமை உணர்ந்திருப்பதை உறுதி செய்யுங்கள். சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களின் பிரதிகளையும் அவர்களிடம் கொடுத்திடுங்கள்.
8 நீங்கள் வெளியேறுவதை இழிவுப்படுத்துபவரிடம் கூறாதீர்கள். சீக்கிரமாக வெளியேறுங்கள்.
9 போலீஸ் துணையின்றி வீட்டிற்கு திரும்பாதீர்கள்.
10 இழிவுப்படுத்துபவரை எதிர்த்து நிற்காதீர்.